# தகவல் தொழில்நுட்பவியல் துறை

**மானியக் கோரிக்கை எண்.31**

# கொள்கை விளக்கக் குறிப்பு

# 2012–2013

**முக்கூர் என். சுப்பிரமணியன்**

**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**

©
தமிழ்நாடு அரசு
2012

# தகவல் தொழில்நுட்பவியல் துறை

## மானியக் கோரிக்கை எண்.31

# கொள்கை விளக்கக் குறிப்பு 2012–2013

## பொருளடக்கம்


| அத்தியாயம் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| I. | முன்னுரை | 1–3 |
| II. | தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (எல்காட்) | 4–6 |
| | எல்கோசெஸ் தகவல் தொழில் நுட்பவியல் சிறப்பு பொருளாதார மண்டலங்கள் | 7–14 |
| | வன்பொருள் கொள்முதல் | 14 |
| | மென்பொருள் மேம்பாடு | 15 |
| | மடிக்கணினி வழங்கும் திட்டம் | 15–16 |
| | நிறுவன வள திட்ட மென்பொருள் | 16 |
| | தகவல் தொடர்பு தொழில் நுட்பக் கொள்கை 2012 | 17 |
| III. | தகவல் தொழில் நுட்ப உள்கட்டமைப்பு | 18 |
| | இணைப்பு | 19–21 |

| | | |
|---|---|---|
| | தேசிய அறிவு வலையமைப்பு | 21–22 |
| | தமிழ்நாடு மாநில தரவு மையம் | 22–24 |
| | பேரிடர் மீட்பு மையம் | 24 |
| IV. | தமிழ்நாடு மின் ஆளுமை முகமை | 25 |
| | மின் மாவட்ட திட்டத்தை மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்துதல் | 26 |
| | நகர்ப்புற பொதுச் சேவை மையங்கள் | 27 |
| | திறன் கட்டமைப்பு | 27–28 |
| | தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு | 28 |
| | மாநில சேவை இணையதளம், மாநில சேவை விநியோக நுழைவாயில் மற்றும் மின்படிவங்கள் | 29–30 |
| V. | மின் ஆளுமை முயற்சிகளில் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் பங்கு | 31 |
| | மின்ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருது | 31–32 |
| | மின்ஆளுமை விழிப்புணர்வு முகாம் | 32 |
| | குடிமக்கள் தொடர்பு மையம் | 32–34 |
| | சிறப்பு நோக்குத் துறைகள் | 34–37 |
| VI. | தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் நிறுவனம் | 38–39 |
| VII. | தமிழ் இணையக் கல்விக்கழகம் | 40–43 |
| VIII. | தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனம் | 44–49 |
| IX. | 2012–2013 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் | 50–52 |

## அத்தியாயம் I

# முன்னுரை

அகில இந்திய அளவில் தமிழகத்தை அறிவாற்றலின் தலைமையிடமாகவும், புதுமைகளின் மையமாகவும் உருவாக்குவதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வையாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் தமிழ்நாடு சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள், திறன்மிக்க மனிதவளம் ஆகியவற்றை உள்ளடக்கி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த முதலீடுகளுக்கு உகந்த சிறந்த இடமாகத் திகழ்கிறது.

தகவல் தொழில்நுட்பவியல் துறையின் குறிக்கோள்கள் பின்வருமாறு:-

- **மிக விரைவாக, குடிமக்களுக்கு அரசின் தகவல்கள் மற்றும் பரிமாற்றங்கள் ஆகியவற்றை இணையம் வாயிலாக அவர்கள் இருப்பிடத்திலேயே வழங்குதல்;**
- **கிராமம் மற்றும் நகர மக்களிடையே தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் உள்ள இடைவெளியை நிரப்புதல்;**
- **தமிழ்நாட்டை, தகவல் தொழில்நுட்பத்தின் அடிப்படையிலான மின் ஆளுமையில் சிறந்த மாநிலமாக மாற்றுதல்;**



- **தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதியை கணிசமான அளவுக்கு உயர்த்துதல்;**
- **தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் கம்பிவட தொலைக்காட்சி சேவைகளை விரைவாக நியாயமான விலையில் வழங்குதல்;**
- **கணினித் தமிழை உயர்நிலைக்கு எடுத்துச் செல்லுதல்;**
- **குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தினை தகவல் தொழில்நுட்பத்தின் மூலம் மேம்படுத்துதல்.**

அரசின் சேவைகளை மாநிலத்தின் மூலை முடுக்கில் உள்ள மக்களுக்கும் கொண்டு செல்ல தற்போதுள்ள ஆதாரங்களைக் கொண்டு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இனி வரும் காலங்களில் அரசின் சேவைகளைக் குடிமக்களுக்கு மேலும் சிறந்த முறையில் வழங்கும் நிலை உருவாகி வருகிறது. இம்மாற்றத்தினால் குடிமக்கள் அரசின் சேவையை ஆன்லைன் (online) மூலமாகப் பெறும் நிலை ஏற்படும்.

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் உதவியுடன் அரசின் சேவைகள் மூலம் மக்கள் முழுமையான பயன் அடையும் விதத்தில் மின் ஆளுமை கொள்கை விரைவில் வெளியிடப்படும். இதனால் மக்களுக்கு உள்ள இடர் களையப்பட்டு ஆளுமை மக்களிடம் நெருக்கமாகக்

கொண்டு செல்லப்படும். தமிழக அரசு இதன்மூலம் செயல்திறன் மிக்க மற்றும் வெளிப்படையான நிர்வாகத்தை ஊக்குவித்து சமூகத்தில் உள்ள அனைவரும் வளர்ச்சி, பாதுகாப்பு மற்றும் சமவாய்ப்புகளைப் பெற்றிட உதவும்.

தமிழகம் தகவல் தொழில்நுட்பவியல் புரட்சியில் முன்னோடி மாநிலமாக விளங்குகிறது. தற்சமயம், தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் அதனைச் சார்ந்த சுமார் 1750 நிறுவனங்களில் 3,50,000 பேர் பணியாற்றி வருகின்றனர். தமிழகத்தில் 2010–2011ம் ஆண்டில் ரூ.42,100 கோடியாக இருந்த மென்பொருள் ஏற்றுமதி, 2011–2012ம் ஆண்டில் ரூ.48,000 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த முதலீடுகளை அதிக அளவில் ஈர்ப்பதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் புத்துயிரூட்டப்பட்ட தமிழ்நாடு கம்பிவட தொலைக்காட்சி நிறுவனத்தின் மூலம் மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் கம்பிவடச் சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இச்சேவைகளை மேலும் மேம்படுத்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



**அத்தியாயம் – II**

# தமிழ்நாடு மின்னணு நிறுவனம்

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் இந்திய நிறுவனங்கள் சட்டம், **1956**ன் கீழ் பதியப்பட்ட தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஒரு தொழில் நிறுவனமாகும். மின்னணு தொழில்துறையை முன்னேற்றும் பணிக்காக அமைக்கப்பட்ட இந்நிறுவனம், இந்தியாவில் ஏற்பட்ட தகவல் தொழில்நுட்பப் புரட்சியின் காரணமாக தமிழகத்தில் தகவல் தொழில்நுட்ப மேம்பாட்டில் ஓர் அங்கமாக விளங்கி வருகிறது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழக அரசின் அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு வாரியங்களுக்கு, தகவல் தொழில்நுட்பம், மின்ஆளுமை தொடர்பான பணிகளில் இணையத் தொடர்பு, கொள்முதல் திறன் மற்றும் கட்டமைப்பு வழங்குதல் போன்றவைகளுக்கு உதவி செய்கிறது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தமிழக அரசின் வன்பொருள் கொள்முதல், மென்பொருள் தயாரிப்பு, அரசு சார்ந்த தகவல் தொழில்நுட்பவியல் திட்டங்கள் மற்றும் இந்திய அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையின் திட்டங்களைச் செயல்படுத்தும் ஒரு முதன்மையான முகமையாக செயலாற்றி வருகிறது.

தமிழ்நாடு பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN), மாநில தரவு மையம் (SDC) போன்ற திட்டங்களை அமைத்து செயல்படுத்தியதன் மூலம் முன்னோடி நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப சிறப்புப் பொருளாதார மண்டலங்களை எல்கோசெஸ் (ELCOSEZ) என்ற முத்திரைப் பெயராக அறிவித்துள்ளார். எல்கோசெஸ் என்பது இனிவரும் காலங்களில் தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் வழங்கிடும் முதலீட்டாளர்களுக்கு ஒரு விருப்ப இலக்காக முன்நிறுத்தப்படும்.

## எல்கோசெஸ் (ELCOSEZs) தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் (Information Technology Special Economic Zones)

2002ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையில், அறிவுசார்ந்த தொழில் நகரியத்திற்குத் **(Knowledge Industry Township)** தேவையான முதன்மைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த முதனிலை செயல்திட்டம் **(Blue Print)** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டது.



அதில் அறிவுசார்ந்த தொழில் நகரியம் சென்னையில் தகவல் தொழில்நுட்பவியல் நெடுஞ்சாலையில் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பில் உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, திருநெல்வேலி, ஓசூர் மற்றும் சேலத்தில் தகவல் தொழில்நுட்பவியல் முதலீட்டைப் பெருக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டது. அந்தத் தொலைநோக்குப் பார்வையின் **(Vision)** அடிப்படையில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் எட்டு இடங்களில் “**எல்கோசெஸ்**” தகவல் தொழில்நுட்பவியல் சிறப்புப் பொருளாதார மண்டலங்களை உருவாக்கியுள்ளது.

1. சென்னை – சோழிங்கநல்லூர் எல்கோசெஸ்
2. கோயம்புத்தூர் – விளாங்குறிச்சி எல்கோசெஸ்
3. மதுரை – இலந்தைக்குளம் எல்கோசெஸ்
4. மதுரை – வடபழஞ்சி–கிண்ணிமங்கலம் எல்கோசெஸ்
5. திருச்சி – நவல்பட்டு எல்கோசெஸ்
6. திருநெல்வேலி – கங்கைகொண்டான் எல்கோசெஸ்
7. சேலம் – ஜாகீர் அம்மாபாளையம் எல்கோசெஸ்
8. ஓசூர் – விஸ்வநாதபுரம் எல்கோசெஸ்

# <u>எல்கோசெஸ் நிலை</u>

## சென்னை – சோழிங்கநல்லூர் எல்கோசெஸ் (Chennai-Sholinganallur ELCOSEZ)

சோழிங்கநல்லூரில் எல்கோசெஸ் அமைக்க தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு 377.08 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு அரசு உரிமை மாற்றம் செய்துள்ளது.

377.08 ஏக்கரில், 215 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் பல்வேறு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்காக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் 42 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளது. இந்த எல்கோசெஸ்சில் திருவாளர்கள் விப்ரோ நிறுவனம் 23 இலட்சம் சதுர அடி கட்டடத்தைக் கட்டி முடித்து, அதில் தற்போது 14,000 பணியாளர்களுடன் செயல்பட்டு வருகிறது. திருவாளர்கள் எச்.சி.எல். நிறுவனம் 10 இலட்சம் சதுர அடி கட்டடத்தைக் கட்டி முடித்து, அதில் 10,000 பணியாளர்களுடன் தங்களுடைய அலுவலகத்தை நடத்தி வருகிறது. திருவாளர்கள் சத்யம் நிறுவனம் 4.5 இலட்சம் சதுர அடி பரப்பளவுள்ள கட்டடத்தைக் கட்டி முடித்து அதில் 4,000 பணியாளர்களுடன் தங்களுடைய அலுவலகத்தை நடத்தி வருகிறது. இந்த எல்கோசெஸ்சில்



திருவாளர்கள் காக்னிசென்ட் டெக்னாலஜிஸ் சொலுசன்ஸ் நிறுவனம் 28 இலட்சம் சதுர அடி பரப்பளவுள்ள கட்டடத்தைக் கட்டத் தொடங்கியுள்ளது.

## கோயம்புத்தூர் – விளாங்குறிச்சி எல்கோசெஸ் (Coimbatore - Vilankurichi ELCOSEZ)

கோயம்புத்தூரில் விளாங்குறிச்சி கிராமத்தில் எல்கோசெஸ்சை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு அரசு 61.59 ஏக்கர் நிலத்தை தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்துள்ளது. இந்த எல்கோசெஸ்சில் இரு நிறுவனங்களுக்குத் தலா 9.5 ஏக்கர் நிலம் குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைத் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அமைத்துள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் திருவாளர்கள் டைடல் பார்க் கோயம்புத்தூர் லிமிடெட் 17 இலட்சம் சதுர அடி பரப்பளவுள்ள தகவல் தொழில்நுட்பவியல் பூங்காவைக் கட்டி முடித்து, செப்டம்பர் 2011 முதல் தங்களது அலுவலகத்தை நடத்தி வருகிறது.

### மதுரை – இலந்தைக்குளம் எல்கோசெஸ் (Madurai - Ilandhaikulam ELCOSEZ)

மதுரையில் இலந்தைக்குளம் கிராமத்தில் எல்கோசெஸ் உருவாக்குவதற்கு, தமிழ்நாடு அரசால் 28.91 ஏக்கர் நிலம் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டது. இப்பூங்காவில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் 50,000 சதுர அடி பரப்புள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிர்வாகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் 6.75 ஏக்கர் நிலம் இரண்டு நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எல்காட் நிறுவனத்தால் கட்டப்பட்டுள்ள 50,000 சதுர அடி பரப்புள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிர்வாகக் கட்டடத்தில் ஒரு நிறுவனத்திற்கு 2000 சதுர அடி பரப்பளவுள்ள அலுவலக இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### மதுரை – வடபழஞ்சி மற்றும் கிண்ணிமங்கலம் எல்கோசெஸ் (Madurai - Vadapalanji - Kinnimangalam ELCOSEZ)

மதுரையில், வடபழஞ்சி–கிண்ணிமங்கலம் கிராமத்தில் எல்கோசெஸ்சை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு தமிழக அரசால் 245.17 ஏக்கர் நிலம் உரிமை



மாற்றம் செய்யப்பட்டது. இந்த எல்கோசெஸ்சில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கான பணிகள் முடிவடைந்துள்ளன. இந்த எல்கோசெஸ்சில் ஏழு ஏக்கர் நிலம், இரண்டு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### திருச்சி – நவல்பட்டு எல்கோசெஸ் (Trichy - Navalpattu ELCOSEZ)

திருச்சியில் நவல்பட்டு கிராமத்தில் எல்கோசெஸ்சை உருவாக்குவதற்கு, தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசு 147.61 ஏக்கர் நிலத்தை உரிமை மாற்றம் செய்துள்ளது. இந்த எல்கோசெஸ்சில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் 50,000 சதுர அடி பரப்பளவுள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிர்வாகக் கட்டடம் முடிக்கப்பட்டுள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் 26 ஏக்கர் நிலம், ஏழு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் அமைந்துள்ள தமிழ் நாடு மின்னணு நிறுவனத்தின் 50,000 சதுர அடி பரப்பளவுள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிர்வாகக் கட்டடத்தில் இரண்டு நிறுவனங்களுக்கு 9,200 சதுர அடி பரப்பளவுள்ள அலுவலக இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆகஸ்ட் 2011 முதல் இந்த எல்கோசெஸ் செயல்பட்டு வருகிறது.

## திருநெல்வேலி – கங்கைகொண்டான் எல்கோசெஸ் (Tirunelveli - Gangaikondan ELCOSEZ)

திருநெல்வேலியில் கங்கைகொண்டான் கிராமத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் எல்கோசெஸ் அமைக்க, சிப்காட் நிறுவனம் 500 ஏக்கர் நிலத்தை குத்தகை அடிப்படையில் நில மாற்றம் செய்துள்ளது. அதில், 290 ஏக்கர் நிலம் சிறப்புப் பொருளாதார மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த எல்கோசெஸ்சில் 100 ஏக்கர் பரப்பளவிற்கு தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் 50,000 சதுர அடி பரப்பளவுள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிர்வாகக் கட்டடம் முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 190 ஏக்கர் பரப்பளவிற்கு தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் விரைவில் மேற்கொள்ளப்படும்.



இந்த எல்கோசெஸ்சில் 102 ஏக்கர் நிலம், இரண்டு தகவல் தொழில்நுட்பவியல் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த எல்கோசெஸ்சில் சிறப்புப் பொருளாதார மண்டலம் அல்லாத பகுதியில் ஒரு நிறுவனத்திற்கு 25 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சேலம் – ஜாகீர் அம்மாபாளையம் எல்கோசெஸ் (Salem - Jagir Ammapalayam ELCOSEZ)

சேலம் மாவட்டம் ஜாகீர் அம்மாபாளையம் கிராமத்தில், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு எல்கோசெஸ் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசால் 164.26 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்யப்பட்டது.

இந்த எல்கோசெஸ்சில் முதற்கட்டமாக 53.33 ஏக்கர் பரப்பளவிற்குத் தேவையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் பணிகள் நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது. இந்த எல்கோசெஸ்சில் 11.50 ஏக்கர் நிலம் நான்கு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## ஓசூர்–விஸ்வநாதபுரம் எல்கோசெஸ் (Hosur - Viswanathapuram ELCOSEZ)

ஓசூர்–விஸ்வநாதபுரம் கிராமத்தில் எல்கோசெஸ்சை உருவாக்குவதற்கு தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கு, தமிழக அரசால் 174.47 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்யப்பட்டது. இந்த எல்கோசெஸ்சில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளுக்கான பணிகள் மற்றும் 50,000 சதுர அடி பரப்பளவுள்ள தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் நிர்வாகக் கட்டடம் கட்டுவதற்கான பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

இந்த எல்கோசெஸ்சில் 10 ஏக்கர் நிலம் மூன்று தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## வேலூர் மற்றும் விழுப்புரம் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள்

வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் அமைப்பதற்குத் தேவையான நிலத்தைக் கண்டறியும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



இந்த எட்டு எல்கோசெஸ்களில் ஒதுக்கீடு செய்யப்படாமல் உள்ள நிலங்களை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சேவைகள் வழங்கும் நிறுவனங்களின் முதலீட்டை ஈர்த்து அந்நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்திட தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## வன்பொருள் கொள்முதல் (Hardware Procurement)

அரசுத் துறைகள் மற்றும் அதனைச் சார்ந்த நிறுவனங்களுக்குத் தேவையான வன்பொருட்களைக் கொள்முதல் செய்திட தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தையும் ஒரு கொள்முதல் முகமையாகக் கருதிட அரசு ஆணையிட்டுள்ளது. தமிழ் நாடு மின்னணு நிறுவனம், கருவூலம் மற்றும் கணக்குத் துறை, பள்ளிக் கல்வித் துறை, உயர் கல்வித் துறை, வணிக வரித் துறை, பதிவுத்துறை, கூட்டுறவுத் துறை, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை மற்றும் விவசாயத் துறை போன்ற துறைகளுக்குத் தேவையான கணினி சாதனங்களை வாங்குவதற்கான உதவிகளைச் செய்துவருகிறது.

## மென்பொருள் மேம்பாடு (Software Development)

தமிழ்நாடு மின்னணு நிறுவனம், தமிழ்நாடு மின் ஆளுமை முகமை மற்றும் தேசிய தகவல் மையம் ஆகிய நிறுவனங்கள், அரசு அலுவலகங்களுக்குத் தேவையான மென்பொருளை ஆய்வு செய்யவும், செயற்குறிப்பு ஆவணத்திற்கான கோரிக்கைகள் **(Request for Proposal)** தயார் செய்யவும், மின் ஒப்பந்தப்புள்ளி கோருதல் மற்றும் மென்பொருள் உருவாக்குபவர்களைத் தேர்வு செய்வதற்கும், தங்களது ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பினை அளித்து வருகின்றன. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் மென்பொருள் வளர்ச்சி சுழற்சி முறை **(Software Development Life Cycle)** அணுகுமுறையின் வாயிலாக ஒட்டுமொத்த வளர்ச்சியை செயல்படுத்துவதற்கான முழு ஆவணத்தை உருவாக்குகிறது.

## மடிக்கணினி வழங்கும் திட்டம்

மாநிலத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் பிளஸ் 2 மாணவ மாணவியர்கள் மற்றும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்கள் சிறந்த கணினித் திறன் பெற ஏதுவாக, தமிழக அரசு மடிக்கணினி வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த



முடிவு செய்தது. இதற்கான கொள்முதல் பணிகளை தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திடம் ஒப்படைத்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. **2011–2012ம்** ஆண்டிற்குத் தேவைப்படும் **9,07,790** மடிக்கணினிகளைக் கொள்முதல் செய்து விநியோகிக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. **2012–2013ம்** ஆண்டிற்குத் தேவையான மடிக்கணினிகளைக் கொள்முதல் செய்வதற்கான அனைத்து முன் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## நிறுவன வளத்திட்ட மென்பொருள் (ERP)

தமிழ்நாடு மின்னணு நிறுவனம் தனது அனைத்து செயல்பாடுகளையும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலிருந்தும் நிறைவேற்றும் வகையில் லினெக்ஸ் இயக்குதளத்தில் வலைத்தள மென்பொருளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நிறுவன வளத்திட்ட மென்பொருளை (ERP) உருவாக்கியுள்ளது. இந்த மென்பொருள் பின்வரும் அரசுத்துறைகளின் தேவைக்கேற்றவாறு மாற்றம் செய்து வழங்கப்பட்டுள்ளது.

1. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் வளர்ச்சிக் கழகம்
2. தமிழ்நாடு கனிம நிறுவனம்
3. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அலுவலகம்.

அந்நிய நேரடி முதலீடு மற்றும் உள்நாட்டு மூலதனத்தை ஈர்க்கவும், வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் மற்றும் தமிழகத்தின் இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் ஊரகப் பகுதிகளில் தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பம் பரவலாக வளர்வதற்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கும் வகையிலும் புதிய தகவல் தொடர்பு தொழில் நுட்பக் கொள்கை 2012 விரைவில் வெளியிடப்படும்.



**அத்தியாயம் – III**

## தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு (IT Infrastructure)

தகவல் தொழில்நுட்பத்தின் சமீபகால வளர்ச்சிகளான மேகக்கணினியம், கணினி தரவு மையம், வலைய இணைப்பு, கட்டப் பகிர்மான தரவு சேமிப்பு மற்றும் கட்டப் பகிர்மானம் சார்ந்த வளங்களின் பரிமாற்றம் போன்றவற்றின் ஒருங்கிணைப்பிற்கு தகவல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பு ஆதார அடிப்படையாக விளங்குகிறது.

தடையில்லா வலைய சேவைகளை வழங்க பின்வரும் உள் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

அ) தமிழ்நாடு மாநில தரவு மையம் (Tamil Nadu State Data Centre)

ஆ) எல்காட் தரவு மையம் (ELCOT Data Centre)

இ) தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (Tamil Nadu State Wide Area Network)

## இணைப்பு (Connectivity)

### தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு நேர்நிலை இணைப்பு (TNSWAN - Vertical Connectivity)

தமிழகத்தில் 708 வலைய இணைப்பு முனைகளை (PoP) கொண்ட தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு கட்டமைப்பினை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் நிறுவியுள்ளது. ரூ.181.69 கோடி மதிப்பீட்டிலான இத்திட்டம் மத்திய, மாநில அரசுகளுக்கிடையேயான பகிர்வுத் திட்டமாகும். (மத்திய அரசின் பங்கு ரூ.97.17 கோடிகள், மாநில அரசின் பங்கு ரூ.84.52 கோடிகள்). இவ்வலையமைப்பு, தமிழக அரசுத் துறைகளுக்கு குரல், தரவு, வலையம் மற்றும் காணொலி சார்ந்த சேவைகளை வழங்குகிறது.

நவம்பர் 30, 2012 அன்று இவ்வலையமைப்பின் கட்டமைத்து, உடைமையாக்கி, இயக்கி, உரிமை மாற்றம் செய்யும் (BOOT- Build, Own, Operate & Transfer) செயல்பாடுகள் முடிவடைகின்றன. அதன் பிறகு இவ்வலையமைப்பின் இயக்கம் மற்றும் நிர்வாகம் மாநில அரசின் கட்டுப்பாட்டில் வரும். அதற்கான செயற் திட்டங்கள் உருவாக்கத்தில் உள்ளன.



### தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு – கிடைநிலை இணைப்பு (TNSWAN – Horizontal Connectivity)

தமிழக அரசின் துறைகள் அனைத்தும் இவ்வலையமைப்பின் உள் இணையத்திற்குள் வருவதற்கும், தங்கள் துறையின் வலைய செயல்பாடுகளை வலையேற்றுவதற்கும் மற்றும் இவ்வலையமைப்பின் பிற சேவைகளான குரல், தரவு, வலையம் மற்றும் காணொலி கலந்தாய்வு ஆகியவற்றைப் பெறுவதற்கும் இவ்வலையமைப்பின் இணைப்பு முனைகளுடன் இணைக்கப்பட வேண்டும்.

இது வரை, வணிகவரித்துறை, தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியம், தமிழ்நாடு சுகாதார அமைப்புத் திட்டம் (TNHSP), கருவூலம் மற்றும் கணக்குத் துறை, பதிவுத் துறை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை, வனத்துறை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA), மாநில சுகாதார சங்கம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், நில அளவைத் துறை, தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் முதலான பல அரசுத் துறைகளின் சுமார் 1,600 அலுவலகங்களுக்கு இவ்வலையமைப்பின் கிடைநிலை இணைப்பு அளிக்கப்பட்டுள்ளது.

## அகண்ட அலைவரிசை இணைப்பு (Broadband Connectivity)

அகண்ட அலைவரிசை இணைப்பு பெருமளவிலான தரவுகளை அதிக வேகத்தில் அனுப்ப உதவுகிறது. அரசுத் துறைகளுக்கிடையேயான தகவல் பரிமாற்றத்தை எளிதாக்கும் விதமாக அதிகரித்துவரும் தகவல் தொடர்பு சார்ந்த செயல்பாடுகள், அரசுத் துறைகளுக்கிடையேயான அகண்ட அலைவரிசை இணைப்பின் தேவையை உருவாக்கியுள்ளன. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் அரசுத் துறைகளுக்கு சலுகை விலையில் அகண்ட அலைவரிசை இணைப்பை அளித்து வருகிறது. இதுவரை சுமார் 7,450 அரசு அலுவலகங்களுக்கு அகண்ட அலைவரிசை இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசுப் பள்ளிகளும் இந்த எண்ணிக்கையில் அடங்கும்.

## தேசிய அறிவு வலையமைப்பு (National Knowledge Network)

தேசிய அறிவு வலையமைப்பு (NKN) என்பது, இந்தியா முழுவதிலுமுள்ள கல்வி நிறுவனங்களை இணையத்துடனும், உலகளாவிய அறிவியல் சமூகத்துடனும் இணைப்பதற்காக மத்திய அரசால் நிறுவப்பட்ட தேசிய அளவிலான அதிவேக கணினி வலையமைப்பு ஆகும். இந்தத் தேசிய அறிவு வலையமைப்பானது மனிதகுல மேம்பாட்டிற்காக



அறிவியலாளர்கள், ஆய்வாளர்கள், மருத்துவர்கள், கற்றறிவாளர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான ஒரு பொதுவான இயங்குதளத்தினை வழங்குகிறது. தேசிய மின் ஆளுமை திட்டத்திற்காகவும் (NeGP) ஒரு பொதுவான இயங்கு இணையதளத்தினை வழங்கி தேசிய அளவிலான பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்த உதவுகிறது. மத்திய அரசுக்கு சொந்தமான இந்த வலையமைப்பிற்குத் தேவையான இணைய அலைக்கற்றைகளை மத்திய அரசு நிறுவனங்களான பாரத் சன்சார் நிகாம் லிமிடெட் (BSNL), பவர்க்ரிட் கார்பரேஷன் ஆப் இந்தியா லிமிடெட் (PGCIL) மற்றும் ரெயில்டெல் ஆகியவை வழங்கி வருகின்றன. இந்த தேசிய அறிவு வலையமைப்பு அதிவேக இணையதள தொடர்பினை, துவக்கத்தில் ஒரு நொடிக்கு 2.5 / 10 கிகாபிட் வேகத்தில் ஆரம்பித்து அதன் மடங்குகளாக முன்னேறி ஒரு நொடிக்கு 40 / 100 கிகாபிட் (Gbps) வேகத்தில் வழங்குகிறது.

## தமிழ்நாடு மாநில தரவு மையம் (Tamil Nadu State Data Centre)

தமிழகத்தில், தமிழ்நாடு மாநில தரவு மையம் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் உருவாக்கப்பட்டு 01.08.2011 முதல்

செயல்பாட்டில் உள்ளது. இது தேசிய மின் ஆளுமைத் திட்டத்திற்கான அடிப்படை உள்கட்டமைப்பு ஆதாரங்களில் முக்கியமான ஒன்றாகும். மத்திய மற்றும் மாநில அரசுகளின் பகிர்வுத் திட்டமான இதன் உத்தேச செலவு மதிப்பீடு ரூ.60.80 கோடி ஆகும். (மத்திய அரசின் பங்கு ரூ.55.80 கோடி மற்றும் மாநில அரசின் பங்கு ரூ.5 கோடி). இத்திட்டம் இந்திய அரசின் தகவல் தொழில்நுட்பத் துறையின் வழிகாட்டி விதிமுறைகளின்படி உருவாக்கப்பட்ட திட்டமாகும்.

தமிழ்நாடு மாநில தரவு மையம் ஒருங்கிணைந்த இணையதள உள்கட்டமைப்பு, மென் செயற்பாடுகள் வழியாக செம்மையான மின்னணுசார் சேவைகளை அரசிடமிருந்து அரசுக்கும், அரசிடமிருந்து குடிமக்களுக்கும், அரசிடமிருந்து வணிகத்திற்கும் வழங்குவதற்கான வழிமுறைகளை எளிமைப்படுத்துகிறது. தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (TNSWAN), பொதுச் சேவை மையம், மற்றும் இணைய தளம் வாயிலாக இம்மாநில தரவு மையம் பல்வேறு சேவைகளை வழங்க உள்ளது.

அரசின் அனைத்துத் துறைகளுக்கும் இந்த தமிழ்நாடு மாநில தரவு மையம் பாதுகாப்பான, ஒன்றிணைக்கப்பட்ட தரவுக் களஞ்சியமாக உள்ளது. தற்போது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கான ஆவண மேலாண்மை திட்டம் (Document



Management System), தமிழ்நாடு சுகாதார அமைப்புத் திட்டம் (TNHSP), விலையில்லா மடிக்கணினி மற்றும் மிக்ஸி–மின் விசிறி–கிரைண்டர் திட்டங்களுக்கான நிறுவன வளத்திட்ட மென்பொருள் ஆகியவையும் இம்மாநில தரவு மையத்தில் தரவேற்றப்பட்டுள்ளன.

## பேரிடர் மீட்பு மையம் (Disaster Recovery Centre)

அரசுத் துறைகளின் செயல்பாடுகள் மற்றும் சேவைகள் சார்ந்த தரவுகள் தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் பாதுகாப்பாக சேமித்து வைக்கப்பட்டுள்ளன. எனினும், இயற்கை / மனித ரீதியான பேரிடர்கள் ஏற்படும் போது உண்டாகும் தரவு / செயல்பாடுகளின் இழப்பைத் தவிர்க்க பேரிடர் மீட்பு மையம் ஒன்றை அமைப்பது இன்றியமையாததாகிறது. தமிழ்நாட்டில் பேரிடர் மீட்பு மையம் அமைப்பதற்கான நிர்வாக ஒப்புதலை அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்தினை இரு கட்டங்களாக நடைமுறைப்படுத்துவதற்கான செயல்பாட்டு முகமையாக தமிழ்நாடு மின்னணு நிறுவனம் நியமிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் IV

# தமிழ்நாடு மின் ஆளுமை முகமை
# (Tamil Nadu e-Governance Agency)

தமிழ்நாடு மின் ஆளுமை முகமை, மாநிலத்தில் அரசுத் துறைகளில் மின் ஆளுமை முயற்சிகளை மேற்கொள்ள உருவாக்கப்பட்ட ஒரு தன்னாட்சி பெற்ற சங்கமாகும். மின்ஆளுமை இயக்குநர் இச்சங்கத்தின் முதன்மை செயல் அலுவலராவார்.

தமிழ்நாடு மின் ஆளுமை முகமையால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகள் பின்வருமாறு:-

- மின் மாவட்டத் திட்டத்தை மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்துதல்
- பொதுச் சேவை மையங்கள்
- திறன் கட்டமைப்பு
- தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு
- மாநில சேவை இணைய தளம்



## மின் மாவட்டத் திட்டத்தை மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்துதல்

அரசுக்கும் பொதுமக்களுக்குமிடையேயான தொடர்புகள் மாவட்ட நிர்வாகம் மூலமே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இத்தொடர்புகளை மேம்படுத்துவதற்காகவும், மாவட்ட அளவில் பல்வேறு துறை சார்ந்த சேவைகளைத் தடையின்றி பொதுமக்களுக்கு வழங்குவதற்காகவும் உருவாக்கப்பட்ட திட்டமே மின் மாவட்டத் திட்டமாகும்.

இத்திட்டம் முன்னோடியாக கிருஷ்ணகிரி மாவட்டத்திலும், அதனைத் தொடர்ந்து அரியலூர், பெரம்பலூர், கோயம்புத்தூர், திருவாரூர் மற்றும் நீலகிரி ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இத்திட்டத்தினை மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்த மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

அனைத்து மாவட்டங்களிலும் மின்மாவட்டத் திட்ட சேவைகள் மற்றும் இதர சேவைகளை மேற்பார்வையிட மாவட்டந்தோறும் மின் ஆளுமை சங்கங்களை(DeGS) அமைத்திட அரசு ஆணையிட்டுள்ளது. அனைத்து அரசுத் துறைகளும் இணைய வழி சேவைகளைக் கண்டறிந்து, அவற்றை மின் மாவட்டத் திட்டம் மூலமாக வழங்கவுள்ளன.

## நகர்ப்புற பொதுச் சேவை மையங்கள் (Urban Common Service Centres)

சென்னை மாநகரில், நகர்ப்புற பொதுச் சேவை மையங்கள் ஒரு முன்னோடித் திட்டமாக உருவாக்கப்பட உள்ளன. சென்னை மாநகராட்சி ஆணையர் இத்திட்டத்திற்கான மைய நோக்கு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார். இம்மையங்கள் மூலம் ஒலி, ஒளி மற்றும் தரவு வாயிலான மின் ஆளுமை, கல்வி, சுகாதாரம், தொலை மருத்துவம், பொழுதுபோக்கு சார்ந்த சேவைகள் மற்றும் இதர தனியார் சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்க முடியும்.

## திறன் கட்டமைப்பு (Capacity Building)

அரசு அலுவலர்களின் கணினித் திறனை மேம்படுத்திடவும், பயிற்சியளிக்கவும் திறன் கட்டமைப்பு திட்டம் உருவாக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் அடிப்படை கணினி, மென் திறன், வன்பொருள் மற்றும் வலையமைப்பு, தரவு மேலாண்மை, ஐ.பி.வி **6** மற்றும் தத்தம் துறை சார்ந்த மென்பொருள் ஆகியவற்றில் தொடர்ந்து பயிற்சியளிக்கப் படுகிறது. இத்தொடர் பயிற்சிகள் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.



மாநில மின் குறிக்கோள் குழு **(SeMT)** ஒன்று தமிழ்நாடு மின் ஆளுமை முகமையில் ஏற்படுத்தப்பட்டு, அக்குழு துறைகளுக்கு பின்வரும் உதவிகளை வழங்கி வருகிறது.

- திட்ட மின் குறிக்கோள் குழு அமைப்பது
- துறைகளுக்கான மின் ஆளுமை செயலாக்க வழிமுறைகளை உருவாக்க உதவுதல்
- மின் ஆளுமை திட்டங்களை நடைமுறைப் படுத்துவதில் துறைகளுக்கு ஆலோசனை வழங்குதல்.

## தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு

புவிசார் தகவல் அமைப்பு என்பது, இடம்சார் மற்றும் இடம்சாராத தரவுகளை சீராக இணைத்து மேலாண்மை, பகுப்பாய்வு மற்றும் முடிவெடுத்தலுக்கு உதவும் கருவியாகும். தரப்படுத்தப்பட்ட புவிசார் மென்பொருட்களை நிறுவி அதனை அரசுத் துறைகள் பயன்படுத்தும் வகையில், தமிழ்நாடு புவிசார் தகவல் அமைப்பு மையம் ஒன்றினை உருவாக்கிட தமிழக அரசு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது.

**மாநில சேவை இணையதளம், மாநில சேவை விநியோக நுழைவாயில் மற்றும் மின் படிவங்கள் – (State Portal, State Services Delivery Gateway and e-Forms)**

இத்திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதலை மாநில அரசு வழங்கியுள்ளது. இத்திட்டத்திற்கான ரூ. 16.13 கோடி நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்திற்கான மைய நோக்கு முகமையாக தமிழ்நாடு மின் ஆளுமை முகமை நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கூறுகள் (i) மாநில சேவை இணையதளம் (ii) மாநில சேவை விநியோக நுழைவாயில் மற்றும் (iii) மின் படிவங்கள் ஆகியவை ஆகும். குடிமக்கள் இணைய வாயிலாக படிவங்களை சமர்ப்பிக்கும் விதமாக, மின் படிவங்கள் மாநில சேவை இணையதளத்தில் தரவேற்றப்படும். சமர்ப்பிக்கப்பட்ட மின் படிவங்கள், மாநில சேவை விநியோக நுழைவாயில் வழியாக சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட்டு தமிழ்நாடு மாநில தரவு மையத்தில் உள்ள சேமிப்பு கணினியில் சேமிக்கப்படும். சம்பந்தப்பட்ட துறைகளின் சேவை பிரிவுகள் இத்தகவலை செயலாக்கப்படுத்தி அதற்கான பதிலை மாநில சேவை விநியோக நுழைவாயில் வழியாக மாநில சேவை இணையதளத்திற்கு அனுப்பும். குடிமக்கள் தங்களது விண்ணப்பத்தின் நிலையினை காலவாரியாக மாநில சேவை இணையதளத்திலிருந்து பெற முடியும். தேசிய தகவலியல் மையம்



(National Informatics Centre) இந்த சேவை இணையதளத்தை வடிவமைத்து உருவாக்கியுள்ளது. மின் படிவங்கள் மற்றும் மாநில சேவை விநியோக நுழைவாயிலுக்கான இடைபொருளை உள்ளடக்கிய மாநில சேவை இணையதளம் விரைவில் துவக்கப்படும். குடிமக்கள் இதன் வாயிலாக அரசின் சேவைகளை இணையத்தின் மூலம் விரைவில் பெற இயலும். இந்த புதிய மாநில சேவை இணையதளம் **www.tn.gov.in** என்ற இணையதள முகவரியில் தரவேற்றப்பட்டு குடிமக்களுக்கான சேவைகளை இணையம் வாயிலாக வழங்கும்.

## அத்தியாயம் V

# மின் ஆளுமை முயற்சிகளில் தகவல் தொழில்நுட்பவியல் துறையின் பங்கு

## மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருது

### (i) அரசு துறைகளுக்கான விருதுகள்

மின் ஆளுமையின் மூலம், அரசின் அனைத்து சேவைகளையும் மக்களின் இருப்பிடத்திற்குக் கொண்டு சேர்ப்பதே அரசின் சீரிய நோக்கமாகும். இந்த நோக்கத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்திட முனையும் துறைகளுக்கு ஊக்கமும், உரிய அங்கீகாரமும் அளித்திடும் வகையில் **"மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருது"** ஆண்டுதோறும் வழங்கப்படும். இது தொடர்பாக ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

### (ii) மாணவர்களுக்கான விருதுகள்

வளர்ந்து வருகின்ற இளைய சமுதாயத்தினர், மாணவர்கள் மற்றும் மின் ஆளுமை ஆர்வலர்களுக்கிடையேயும் மின் ஆளுமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையில், புதுமையான மென்பொருள் உருவாக்குகின்ற போட்டிகள் நடத்தப்பட்டு, அப்போட்டிகளில் புதுமையான மற்றும் சிறந்த மின் ஆளுமைக்கான மென்பொருட்களை உருவாக்கிய



வெற்றியாளர்களுக்கு **"மின் ஆளுமைக்கான முதலமைச்சரின் உயரிய விருது"** ஆண்டுதோறும் வழங்கப்படும். இவ்விருது ஆண்டுதோறும் மூன்று பிரிவுகளின் கீழ் வழங்கப்படும். ஒவ்வொரு விருதுதாரருக்கும் அந்தந்த பிரிவுகளின் கீழ், பரிசுத் தொகையாக தலா ரூபாய் 2,00,000 மற்றும் ரூபாய் 15,000 மதிப்பிலான கோப்பையும் வழங்கப்படும். இது தொடர்பாக ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளது.

## மின் ஆளுமை விழிப்புணர்வு முகாம்

"**அரசைத் தேடி மக்கள்**" என்ற நிலையை மாற்றி "**மக்களை நாடி அரசு**" என்ற நிலையை உருவாக்குவதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையாகும். அச்சீரிய சிந்தனையை செயலாக்கிட, மின் ஆளுமை அவசியமாகும். ஆகவே, மின் ஆளுமை குறித்த விழிப்புணர்வை கடைக்கோடி பாமர மக்களுக்கும் கொண்டு சென்றிட, மின் ஆளுமை விழிப்புணர்வு முகாம்கள் வட்டார அளவில் மக்கள் இயக்கமாக நடத்தப்படும். இம்முகாம்கள் விரைவில் நடத்தப்படவுள்ளன.

## குடிமக்கள் தொடர்பு மையம்

மக்களுக்குத் தேவையான தகவல்கள் மற்றும் பரிவர்த்தனைகள், மாநில அளவிலான அரசு குடிமக்கள்

தொடர்பான அவசரமற்ற சேவைகள் வழங்குதல் போன்ற நோக்கத்திற்காக குடிமக்கள் தொடர்பு மையம் ஒன்று மத்திய அரசின் உதவியுடன் நிறுவப்பட உள்ளது. பல்வேறு துறைகளின் சேவை முகப்புகள், இணையதளம் மற்றும் சேவை மையங்கள் ஆகியவற்றின் மூலம், சில சேவைகள் / தகவல்கள் வழங்கப்பட்டாலும், இம்மக்கள் தொடர்பு மையம், தொலைபேசி மற்றும் கைபேசிகளின் விரிவான பயன்பாட்டினால், அதிக பயனுடையதாகவும், மலிவானதாகவும், நாடு முழுவதற்கும் ஒரே தொலைபேசித் தொடர்பு எண்ணுள்ளதாகவும் இருக்கும்.

இத்தொடர்பு மையத்தின் சில சிறப்பம்சங்கள் பின்வருமாறு:-

1. அரசுத் துறையிலிருந்து தகவல் சேவைகள் குறித்த விவரங்களை உடனுக்குடன் பொதுமக்கள் அறிதல்.
2. வட்டார மொழியில் தொடர்பு கொள்ளக்கூடிய ஒரே தொலைபேசித் தொடர்பு எண்.
3. பல்வேறு துறைகளின் சேவைகள் குறித்த விவரம், ஒரே இடத்தில் பெற இயலும்.
4. சேவை குறித்த தகவல்கள் அளித்தல் மற்றும் குறைதீர்ப்பு கையாளுதல்.



இம்மையத்தினை அமைப்பதற்கான நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## <u>சிறப்பு நோக்குத் துறைகள்</u>

தெளிவான திட்ட நோக்கம், அளவிடத்தக்க பயன்கள் மற்றும் சேவை நிலைகள், நிர்ணயிக்கப்பட்ட இலக்கை உரிய நேரத்தில் அடைதல் ஆகியவை தேசிய மின் ஆளுமைத் திட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட ‘‘சிறப்பு நோக்கின்” பொருளாகும். தமிழக அரசு சிறப்பு நோக்குத் திட்டத்தை அமலாக்குவதற்கு, பதினான்கு சிறப்பு நோக்குத் துறைகளை கண்டறிந்துள்ளது. பின்வரும் துறைகள் மாநிலத்தின் சில சிறப்பு நோக்குத் துறைகளாகும்.

### வணிகவரித் துறை

வணிகர்கள் இணையதளம் மூலம் தங்களது விவரங்களைப் பதிவு செய்யவும், மாதாந்திர மதிப்புக் கூட்டு வரி விவரங்களை இணையம் வாயிலாக தாக்கல் செய்யவும் மென்பொருள் ஒன்றினைத் தயாரிக்கும் பணியினை வணிகவரித் துறை மேற்கொண்டுள்ளது. வணிகவரித் துறையை முழுவதுமாக

கணினிமயமாக்க ரூபாய் 230 கோடி நிதியினை அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது.

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை

வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்வதற்கும், தொழில் வழிகாட்டுதல், தரவுகளைத் தொடர்ந்து சேகரித்துத் தொகுத்தல் மற்றும் வேலையில்லாதவர்களுக்கான உதவித் திட்டங்களை செயல்படுத்துதல் போன்ற செயல்களை திறம்பட மக்களுக்கு வழங்குவதற்காக வாரம் முழுவதும் 24 மணி நேரமும் செயல்படும் வலைதள சேவை ஒன்று பிரத்தியேகமாக வேலைவாய்ப்பு இயக்ககத்திற்காக உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் நீளமான வரிசைகளைத் தவிர்க்கும் பொருட்டு இணையம் மூலமாகப் பதிவு செய்யும் வசதி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் தங்கள் பள்ளியிலிருந்தே பதிவு மூப்பினைப் பெற்றிட இயலும். இப்புதிய முயற்சியின் மூலம் சுமார் 12 இலட்சம் மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

## வேளாண்மைத்துறை

**அக்ரிஸ்நெட்,** விவசாயிகளுக்கு ஒற்றைச் சாளர முறையில் தகவல்கள் மற்றும் சேவைகளை வழங்கிடும் ஒரு



மென்பொருளாகும். இம்மென்பொருள், பயிர், பருவநிலை போன்ற தகவல்களை விவசாயிகளுக்கு அளிக்கும்.

## கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை

குடும்ப அட்டைகள் வழங்கிட தமிழகத்திலுள்ள சுமார் இரண்டு கோடி குடும்பங்களின் தரவுகளை தமிழ்நாடு மின்னணு நிறுவனம் உருவாக்கியுள்ளது. இத்தரவுகள் பல்வேறு அரசுத் துறைகளால் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை

சுகாதார மேலாண்மை தகவல் அமைப்பு மாநிலம் முழுவதும் உள்ள மருத்துவமனைகளை நிர்வகிப்பவர்கள் சிறந்த முறையில் கண்காணிக்க மற்றும் மேற்பார்வையிடமட்டுமல்லாது, மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மருத்துவ சேவைகளை மேம்படுத்துவதற்கும், நோயாளிகள் குறித்த தரவுகள், காகிதமில்லா பணியோட்ட செயல்முறையையும், நோயாளிகளின் சிகிச்சை சுழற்சியில் தூண்டுதல் மற்றும் எச்சரிக்கை அளவுருக்களைத் தீர்மானிக்கவும் உதவுகிறது.

## காவல் துறை

குற்றம் மற்றும் குற்றவியல் கண்காணிப்பு வலையமைப்பு, தேசிய மின் ஆளுமை திட்டத்தின் ஒரு சிறப்பு நோக்குத் திட்டமாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. குற்றங்களை விசாரிப்பதற்கும், குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கும் பரவலான மற்றும் ஒருங்கிணைந்த நாடு தழுவிய இணையதள உட்கட்டமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இது குற்றங்களைக் கண்டுபிடிக்கும் திறனை மேம்படுத்துகின்ற தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஒரு கண்காணிப்பு அமைப்பாகும். இக்கட்டமைப்பு நாட்டின் அனைத்து காவல் நிலையங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இதைத் தவிர வருவாய், பதிவுத்துறை, சமூக நலம் மற்றும் மதிய உணவுத் திட்டத் துறை, போக்குவரத்துத் துறை, கருவூலக் கணக்குத் துறை, கல்வித் துறை, தொழில் துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைகளும் சிறப்பு நோக்குத் துறைகளாகும்.



அத்தியாயம் – VI

# தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பவியல் நிறுவனம்

தமிழ்நாடு தகவல் மற்றும் தகவல் தொடர்புத் தொழில் நுட்பவியல் நிறுவனம் (ICT Academy) என்பது மத்திய அரசு, மாநில அரசு மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு (CII) ஆகியவற்றின் முயற்சியால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பாகும். சுயாட்சி உரிமையுள்ள, இலாப நோக்கு கருதிச் செயற்படாத, இந்நிறுவனம் தனியார் மற்றும் பொதுத் துறையின் கூட்டமைப்பில் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். இது தமிழ்நாட்டில் பயிலும் மாணவர்களின் திறனை மேம்படுத்துவதற்கான ஒரு புதுமையான பாதையை வகுத்துள்ளது.

இந்நிறுவனத்தின் நோக்கமானது, தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பவியல் சார்ந்த செயற்களத்திலுள்ள உயர் கல்வி ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் பயிற்சி அளிப்பதாகும். இதன்மூலம், மாணவர்கள் தொழில் தொடங்குவதற்கும் மற்றும் பணியில் அமர்த்தப்படுவதற்கும் தேவையான தகுதியைப் பெற்று, தமிழ் நாட்டில் உள்ள தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில் நுட்பவியல் துறையை

பயனடையச் செய்யும் வகையில் ஒரு திறமை களத்தை (Talent Pool) உருவாக்க முடியும்.

தமிழகத்தில் அமைந்துள்ள உலகத் தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்கள் வாயிலாகவும் இங்கு கிடைக்கப்பெறும் சீரிய மனிதவள ஆற்றல் வாயிலாகவும் தமிழகத்தை இந்தியாவின் நவீன மற்றும் அறிவுசார் தலைமையகமாக மாற்ற எண்ணியுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எண்ணத்திற்கேற்ப, மாணவர்களின் பல்வேறு திறமைகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களை தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பவியல் மையம் (ICT Academy) மாநில அளவில் செயல்படுத்தி வருகிறது, மேலும், இந்நிறுவனம் கல்லூரி மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பப் பயிற்சி அளிப்பதற்கான திட்டங்களை செயல்படுத்துவதிலும் பங்கு வகிக்கும்.

ஊரக வணிக வெளிப்பணி வசதிகளை எளிதாக்குவதிலும், கண்காணிப்பதிலும் இந்நிறுவனம் பங்கு வகிக்கிறது. தொழில்துறை, கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசின் கூட்டு முயற்சியில் இந்நிறுவனத்திற்குள்ள ஆற்றலானது ஊரக வணிக வெளிப்பணி வசதிகளை மேம்படுத்த உதவும். இதன்மூலம் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க முடியும்.



**அத்தியாயம் – VII**

# தமிழ் இணையக் கல்விக்கழகம்

உலகு தழுவிய நிலையில் வாழும் தமிழ் மக்களும் தமிழில் ஈடுபாடு கொண்டுள்ள பிற மொழியினரும் தமிழ் மொழியையும், அறிவியல், தொழில் நுட்பம், கணினித் தமிழ் மற்றும் தமிழ் பயன்பாட்டு மென்பொருள்களைக் கற்கவும், தமிழர் வரலாறு, இலக்கியம், கலை, பண்பாடு ஆகியவை பற்றி அறிந்து கொள்ளவும் வேண்டிய வாய்ப்புகளை இணையம் வழியாக ஏற்படுத்துவதும், அரசு, கல்வி, ஊடகம், வணிகம் போன்ற பல்துறைகளுக்கும் வேண்டிய கணினித் தேவைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிந்து, நிறுவி, பராமரித்து, பயிற்சியளித்துப் பயன்பாட்டை பெருக்குதலும், இணையம் வழி அளிப்பதும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் நோக்கமாகும்.

## கல்வித் திட்டங்கள்

தமிழ் இணையக் கல்விக்கழகம் தற்போது மழலையர் கல்வி, சான்றிதழ்க் கல்வி, பட்டயம், மேற்பட்டயம், இளங்கலை தமிழியல் பட்டம் ஆகிய கல்வித் திட்டங்களை அளித்து வருகிறது.

70 நாடுகளைச் சேர்ந்த 12,358 மாணவர்கள் பல்வேறு பாடத்திட்டங்களுக்குப் பதிவு செய்துள்ளனர். 1,889 மாணவர்கள் சான்றிதழ் படிப்பிலும், 27 மாணவர்கள் மேற்சான்றிதழ் படிப்பிலும், 237 மாணவர்கள் பட்டயத் தேர்விலும், 128 மாணவர்கள் மேற்பட்டயத்திலும் மற்றும் 109 மாணவர்கள் பட்டத் தேர்விலும் தேர்வு எழுதி வெற்றி பெற்றுள்ளனர். உலகெங்கிலும் உள்ள 56 ஒருங்கிணைப்பு மையங்கள் மூலம் 17 நாடுகளில் இக்கல்வித் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

பாட நூல்களைக் குறுந்தகடாக வெளியிடும் திட்டத்தின் கீழ், மழலையர், சான்றிதழ், இடைநிலை, மற்றும் மேல் நிலை, தமிழ் பயிற்சி, தமிழ் கற்போம் ஆகிய குறுந்தகடுகளும், திருக்குறள் மற்றும் கலைச்சொல் பேரகராதி ஆகிய பிற குறுந்தகடுகளும் உருவாக்கப்பட்டு மாணவர்களின் நலனுக்காக வெளியிடப் பட்டுள்ளன.

இணைய வகுப்பறை வாயிலாகத் தமிழைக் கற்பிக்க 120 பாடங்கள் இணைய தளத்தில் இடப்பட்டுள்ளன. இளங்கலை தமிழியல் பட்டக் கல்விக்கான பாடங்களும் இணைய தளத்தில் இடப்பட்டுள்ளன. இவை அனைத்தும் YouTube-லும் இடப்பட்டுள்ளன.



## மின் நூலகம்

தமிழ் இணையக் கல்விக்கழக மின் நூலகத்தில் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்கள், அகராதிகள், தமிழ் தொழில்நுட்பக் கலைச்சொற்கள், கலைக்களஞ்சியம், பண்பாட்டுக் காட்சியகம், சுவடிக் காட்சியகம் (ஓலை) ஆகியவை மாணவர்கள் மற்றும் பார்வையாளர்கள் உபயோகத்திற்காகத் தளத்திலிடப் பெற்றுள்ளன.

## தமிழ் மென்பொருள் வளர்ச்சி

ஒளி வழித் தமிழ் எழுத்துரு படித்தல், மின் அகராதி, தமிழ் சொற்களஞ்சியம் மற்றும் கையடக்கக் கருவியில் திருக்குறளின் நுண்ணிய தகவல்களைப் பெறுதல் போன்ற பல தமிழ் மென்பொருள்கள் தமிழ் மென்பொருள் மேம்பாட்டு நிதியின் (Tamil Software Development Fund) மூலம் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் முன்அறி தமிழ்ச்சொல் வடிவமைப்பு மென்பொருள் (Predictive Tamil Software Design for Tamil) உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. தமிழ் எழுத்துருக்களையும், அதற்கான விசைப்பலகை மற்றும் இடைமுகங்களையும் அனைவரும் இலவசமாகப் பயன்படுத்தும் வண்ணம் உருவாக்கி அளிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## கலைச் சொல் பேரகராதிகள் வெளியீடு

பல்வேறு பல்கலைக்கழகங்கள் தொகுத்து அளித்துள்ள ஏறத்தாழ 2,50,000 கலைச் சொற்கள் துறை வாரியாகப் பகுக்கப்பட்டு 14 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

## தமிழ் இணையக் கல்விக் கழகக் கட்டடம்

தமிழ் இணையக் கல்விக்கழகக் கட்டடத்தின் தரைத்தளம் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. முதல் தளமும், படத்தளம் மற்றும் காட்சி அரங்கமும் கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.



### அத்தியாயம் – VIII

# தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம்

அரசு கேபிள் டிவி நிறுவனம் என்ற தமிழக அரசு நிறுவனம் இந்திய நிறுவனங்கள் சட்டம் 1956–ன் கீழ் 04.10.2007அன்று துவங்கப்பட்டது. குறைந்த விலையில் சிறந்த கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு வழங்குவது இதன் நோக்கமாகும். இதற்கென தஞ்சாவூர், திருநெல்வேலி, கோயம்புத்தூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் தலா ரூ.8 கோடி செலவில் டிஜிட்டல் தலைமுனைகள் அமைக்கப்பட்டன. ஆயினும் பல்வேறு காரணங்களினால் இந்நிறுவனம் செயலிழந்த நிலையில் இருந்தது.

இவ்வரசு பொறுப்பேற்ற பின்னர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அரசு கேபிள் டிவி நிறுவனம் புனரமைக்கப்பட்டு புத்துயிரூட்டப்பட்டது. இதற்காக இந்நிறுவனத்திற்கு ரூ.3 கோடி நிதியுதவி கடனாக வழங்கப்பட்டது. மேலும், இந்நிறுவனத்தின் பெயர் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் என மாற்றம் செய்யப்பட்டது.

## நிறுவனத்தின் செயல்பாடுகள்

- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் ஏற்கனவே இருந்த 4 டிஜிட்டல் கட்டுப்பாட்டு அறைகளை புனரமைத்ததுடன், 27 மாவட்ட தலைநகரங்களில் அனலாக் கட்டுப்பாட்டு அறைகள் தனியார் பன்முக கேபிள் ஆப்பரேட்டர்களிடமிருந்து குத்தகைக்கு எடுக்கப்பட்டன.
- மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 02.09.2011 அன்று தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் டிவி சேவையை வேலூர் தலைமுனையினை காணொலிக் காட்சி மூலம் இயக்கிவைத்து, சென்னை நீங்கலாக மற்ற மாவட்டங்களில் துவக்கி வைத்தார்.
- மேலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 30.08.2011 அன்று சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரையில் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் மாதம் ரூ.70/– என்ற கட்டணத்தில் தனது கேபிள் டிவி சேவையை பொதுமக்களுக்கு கேபிள் ஆப்பரேட்டர்கள் மூலம் வழங்கும் எனவும் இதில் ரூ.20/–ஐ கேபிள் ஆப்பரேட்டர்கள் தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி



நிறுவனத்திற்கு செலுத்துவார்கள் எனவும் அறிவித்தார்கள்.

- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் கேபிள் சேவை, கேபிள் ஆப்பரேட்டர்களிடமும், பொதுமக்களிடமும் சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் கேபிள் டிவி சேவையினைப் பெறுவதற்கு ஆன்லைன் மூலம் 37,889 ஆப்பரேட்டர்கள் 1.45 கோடி சந்தாதாரர்களுடன் பதிவு செய்தனர். இப்பதிவு விவரங்களை சரிபார்த்தபின் ஆன்லைன் மூலம் பதிவு செய்த ஆப்பரேட்டர்களின் எண்ணிக்கை 30,194 எனவும் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 1.12 கோடி எனவும் உள்ளது. **02.09.2011–ல் இந்நிறுவனம் தனது சேவையை தொடங்கியபோது இந்நிறுவனத்தின் மூலம் இணைக்கப்பட்ட சந்தாதாரர்களின் எண்ணிக்கை 4.94 இலட்சங்கள் என இருந்தது. தற்பொழுது 30.04.2012 வரையில் இணைக்கப்பட்ட சந்தாதாரர்களின் எண்ணிக்கை 49,53,670 எனவும் இந்நிறுவனத்தின் இணைப்பு பெற்றுள்ள ஆப்பரேட்டர்களின் எண்ணிக்கை 21,123 எனவும் உயர்ந்துள்ளது. இந்நிறுவனத்தின் சந்தாதாரர்களின் எண்ணிக்கையை ஒரு கோடி என**

**உயர்த்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

- இந்நிறுவனம் 02.09.2011 அன்று தனது சேவையினை இலவச சேனல்களுடன் தொடங்கியது. பின்னர் பல்வேறு கட்டணச் சேனல் உரிமையாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு 108 கட்டணச் சேனல்கள் பெறப்பட்டுள்ளன. பெரும்பாலான கட்டணச் சேனல்களைப் பெற்று இந்நிறுவனம் தன்னுடைய கேபிள் டிவி சேவையை வழங்கி வருகிறது. இந்நிறுவனம் தற்பொழுது இலவச சேனல்கள், கட்டணச் சேனல்கள் மற்றும் உள்ளூர் சேனல்களுடன் சேர்த்து மொத்தம் 100 சேனல்கள் வரை பொதுமக்களுக்கு வழங்கிவருகிறது.
- தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனம் தனது கேபிள் டிவி சேவையினை தொடங்குவதற்கு முன், பொதுமக்கள் கேபிள் டிவி சேவையை பெற மாதம் ஒன்றுக்கு ரூ.150 முதல் ரூ.250 வரை கேபிள் டிவி கட்டணமாகச் செலுத்தி வந்தனர். ஆனால் தற்போது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சேவை தொடங்கிய பின்னர், இந்நிறுவனத்தின் மூலம் மாதம் ரூ.70 என்ற மிகக் குறைந்த கட்டணத்தில் கேபிள் சேவையைப் பெற்று வருகின்றனர். இதனால் பொது மக்களுக்கு மாதத்திற்கு



ரூ.80 முதல் ரூ.180 வரை மீதமாகின்றது. இக்காரணங்களினால், பொது மக்களிடம் தமிழ்நாடு அரசு கேபிள் டிவி சேவைக்கு மாபெரும் வரவேற்பு உள்ளது.

- இந்நிறுவனம் கேபிள் டிவி ஆப்பரேட்டர்களிடமிருந்து மாதச் சந்தா மற்றும் முன்வைப்புத் தொகையினைப் பெறுவதற்காக வெளிப்படையான மற்றும் எளிதான ஆன்லைன் கட்டணச் செலுத்துமுறையினை இந்தியன் வங்கியின் மூலம் செயல்படுத்தியுள்ளது. இதன்படி, 30.04.2012 வரை ரூ.32.67 கோடி மாதச் சந்தாத் தொகையும் ரூ.25.97 கோடி முன்வைப்புத் தொகையும் கேபிள் ஆப்பரேட்டர்களிடமிருந்து வசூல் செய்யப்பட்டுள்ளது. சந்தா வசூலினை அதிகரிப்பதற்காக, கேபிள் டிவி துணை மேலாளர்கள்/சிறப்பு வட்டாட்சியர்கள் 31 மாவட்டங்களிலும் நியமிக்கப்பட்டுள்ளனர்.
- மேலும் உள்ளூர் சேனல்கள் ஒளிபரப்பை நெறிப்படுத்தும் பொருட்டும், உள்ளூர் சேனல்கள் ஒளிபரப்பாளர்களைத் தேர்வு செய்யவும், மாவட்ட ஆட்சியர்கள் ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏல முறையினைப் பின்பற்றி ஏலம் நடத்தினர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட 431 உள்ளூர் சேனல்களுக்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது. உள்ளூர் சேனல்கள் மூலம் முன்பணமாக **ரூ.7 கோடி** பெறப்பட்டு

உள்ளது. இத்தகைய உள்ளூர் சேனல்களை இந்நிறுவனத்தின் கேபிள் சேவையில் ஒளிபரப்புவதன் மூலம் கேரேஜ் கட்டணமாக மாதந்தோறும் **ரூ.3 கோடி முதல் 4 கோடி** வரை வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

- தற்போது தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் சேவையை சென்னை பெருநகரப் பகுதியில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் விரைவில் ஆரம்பிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



**அத்தியாயம் IX**

# 2012–2013–ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

## உச்சரிப்புடன் கூடிய மின் அகராதி

தமிழ் இணையக் கல்விக்கழகம் இலக்கணக் குறிப்புடன் கூடிய ஒரு விரிதரவினைக் கொண்டுள்ளது. தற்போது தமிழ் இணையக் கல்விக்கழகம் உச்சரிப்புடன் கூடிய மின் அகராதியை உருவாக்க எண்ணியுள்ளது. முதல் முறையாக தமிழ்ச் சொற்களுக்கு உச்சரிப்பு கொடுக்கப்படுகிறது. 2012–2013 ஆம் ஆண்டின் பகுதி 2–ஆம் திட்டத்தின் கீழ் தமிழ் இணையக் கல்விக்கழகத்திற்கு உச்சரிப்புடன் கூடிய மின் அகராதி உருவாக்குவதற்காக ரூ.30 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## தொடரியல் மற்றும் பொருளியல் விளக்கத்துடன் கூடிய விரிதரவு

தமிழ் இணையக் கல்விக்கழகம் சுமார் ஒரு இலட்சம் பக்கங்கள் கொண்ட ஒரு மின்நூலகத்தைக் கொண்டுள்ளது. அது பழங்கால, இடைக்கால மற்றும் தற்கால இலக்கியங்களை உள்ளடக்கி இருக்கிறது.

தற்காலத்தில் கணினி மூலம் மொழிபெயர்ப்புச் செய்வது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அதற்காக ஒரு தொடரியல் மற்றும்

பொருளியல் அடிப்படையில் ஒரு விரிதரவு உருவாக்குவது அவசியமாகிறது. இப்பொழுது தொடரியல் மற்றும் பொருளியல் அடிப்படையில் தமிழ் இணையக் கல்விக்கழகத்தில் உள்ள மின்நூல்களை விளக்கினால் ஒரு சொல் திருத்தி, இலக்கணப் பிழைத்திருத்தி இன்னும் பல மென்பொருள்களைக் கணினி மொழிபெயர்ப்புக்காகத் தமிழில் உருவாக்கலாம். 2012–2013 ஆம் ஆண்டின் பகுதி 2–ஆம் திட்டத்தின் கீழ் ரூ.25 இலட்சம் இத்திட்டத்திற்கென நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

## கணினித்தமிழ் ஆய்வுக் கூடம்

கணினி மொழிபெயர்ப்பு, ஒளி வழித் தமிழ் எழுத்துரு படித்தல் (OCR) போன்ற தமிழ் மென்பொருட்களை உருவாக்குவதற்குக் கணினித்தமிழில் ஆராய்ச்சி மேற்கொண்டு வளர்ச்சிபெறச் செய்ய ஒரு கணினித்தமிழ் ஆய்வுக்கூடம் தேவைப்படுகிறது. ஆகவே 2012–2013 ஆம் ஆண்டின் பகுதி 2–ஆம் திட்டத்தின் கீழ் தமிழ் இணையக் கல்விக் கழகத்திற்கு கணினித்தமிழ் ஆய்வுக்கூடப் பணிகளுக்காக ரூ.20 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.



## மென்பொருள் சேமிப்பக கருவி

தற்போது அரசு துறைகளில் மென்பொருள்கள் அரசு முகமைகள் மற்றும் அயலாக்க முகமைகள் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அயலாக்க முகமை மூலம் நடைமுறைப்படுத்தப்பட்ட மென்பொருள்களில் பிந்தைய காலங்களில் உரிய ஆதரவு, அது தொடர்பான மூல குறியீடு மற்றும் ஆவணங்கள் கிடைக்க பெறுவதில் சிரமங்கள் உள்ளன. இச்சூழலில் துறை சேவைகள் தொடர்ந்து பாதிப்படையும்.

இந்த நிலையிலிருந்து மீண்டுவர அரசு துறைகளுக்கென ஒரு மத்திய மென்பொருள் சேமிப்பகத்தினை உருவாக்கி அச்சேமிப்பகத்தில் மூல குறியீடு மற்றும் ஆவணங்கள் போன்றவற்றை ஒரே இடத்தில் அரசின் பாதுகாப்பில் வைத்து பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தேவைப்படும்போது துறைகள் இதற்கான ஆதரவு மற்றும் ஆவணங்களை எதிர்காலத்தில் சேமிப்பகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும். 2012–2013 ஆம் ஆண்டின் பகுதி 2–ஆம் திட்டத்தின் கீழ் ரூ.17 இலட்சம் இத்திட்டத்திற்கென நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

**முக்கூர் என். சுப்பிரமணியன்**
**தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்**